**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 31-10-2023**

**கடலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-10-31 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-11-01 | 2023-11-02 | 2023-11-03 | 2023-11-04 | 2023-11-05 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 15.0 | 18.0 | 10.0 | 10.0 | 12.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 27.0 | 27.0 | 27.0 | 28.0 | 28.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 24.0 | 24.0 | 24.0 | 25.0 | 25.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 96 | 96 | 96 | 94 | 94 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 88 | 88 | 88 | 86 | 86 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 4 | 4 | 4 | 3 | 3 |
| காற்றின் திசை (கோணம்) | 70 | 70 | 70 | 90 | 90 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 7 | 7 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் வாரங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் ஈரப்பதம் 94-96% ஆகவும், பகல் நேரங்களில் 86-88% ஆக இருக்க வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 27.0-28.0°C ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 24.0-25.0 °C ஆகவும் இருக்கும். காற்றின் வேகமானது மணிக்கு 3-4 கி.மீ ஆக வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

05.11.2023 முதல் 11.11.2023 வரை தமிழ்நாட்டில் மழை இயல்பை விட அதிகமாகவும், அதிக பட்ச வெப்பநிலை மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலை இயல்பாகவும் இருக்கும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| வரும் வாரங்களில் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதால் விவசாயிகள் பயிர்களுக்கு முறையான வடிகால் வசதி அமைக்கவும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் பாசி படர்ந்து வளர்ச்சியை பாதிக்கிறது. இதனை கட்டுப்படுத்த வயல்களில் அதிகபடியாக நீர் தேக்கி வைப்பதை தவிர்க்கவும். பாசி அதிகம் படர்ந்துள்ள வயல்களில் கோனோவீடர், ரோட்டரி வீடர் போன்ற இயந்திரங்களை பயன்படுத்தி களையுடன் பாசிகளை நிலத்தில் மடக்கி உழ வேண்டும். ஏக்கருக்கு 1.0 கிலோ காப்பர் சல்பேட் (மயில் துத்தம்) என்ற அளவில் 10 கிலோ மணலுடன் கலந்து நெல் வயலின் வாய்மடையில் சாக்குப்பையில் இட்டு நீர் பாசனம் செய்ய வேண்டும். (மழை நின்ற பின் இடவும்) |
| நெல் | தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைப்பேன் தாக்கம் தென்பட வாய்ப்புள்ளது. இலைப்பேன் தாக்கிய இளம் பயிர்களின் இலைகள் சுருண்டு நிறம்மாறி காணப்படும். நாற்றுக்களின் இலைகளில் மஞ்சள் நிறகோடுகள் காணப்படும். இதன் அறிகுறிகள் நாற்று பருவத்திலும், நடவு வயலிலும் காணப்படும். இலைப்பேன் தாக்கம் அதிகமாகும் போது இலைகள் வெள்ளை நிறத்தில் மாறிவிடும். நாற்று வயலில் தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த 20 சென்ட் நாற்றங்காலுக்கு தயாமீதாக்ஷம் 8.0 கிராம் வீதம் தெளிக்க வேண்டும். நடவு வயலில் இலைப்பேன் தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த ஏக்கருக்கு அசாடிராக்டின் 400 மிலி (10000 பி.பி.எம்) அல்லது தயாமீதாக்ஷம் 40 கிராம் என்ற அளவில் தெளிக்க வேண்டும். (மழை நின்ற பின் தெளிக்கவும்) |
| உளுந்து | உளுந்து பயிர் செய்ய இருக்கும் விவசாயிகள்விதை மூலம் பரவும் நோய்கள், நாற்றழுகல் மற்றும் வேரழுகல் நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்த கார்பன்டசிம் 2.0 கிராம்/கி.கி விதைக்கு என்ற அளவில் கலந்துவிதை நேர்த்தி செய்யவும் அல்லது ட்ரைக்கோ டெர்மா விரிடி 4.0 கிராம்/கி.கி விதை அல்லது பேசிலாஸ் சப்டில்லஸ் 10 கிராம்/கி.கி விதைக்கு என்ற அளவில் கலந்து விதை நேர்த்தி செய்து பயிரிடலாம். |
| கரும்பு | தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக கரும்பு பயிரில் இடைக்கணுத் துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த முட்டைகளைத் தாக்கும் டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் ஒட்டுண்ணியை எக்டருக்கு 2.5 சி.சி என்ற அளவில், 15 நாட்களுக்கு ஒருமுறை நட்ட நான்காம் மாதத்திலிருந்து ஆறு முறை பயன்படுத்தவும். இந்த |

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | ஒட்டுண்ணி வேளாண் பூச்சியல் துறை, தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் கோயம்புத்தூரில் கிடைக்கும். |
| மக்காச்சோளம் | 1. மக்காச்சோளம் பயிரிடும் விவசாயிகள் படைப்புழுவின் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது, அதை கட்டுப்படுத்த வேப்பம் பிண்ணாக்கு எக்டருக்கு 250 கிலோ இடலாம். 2. சியன்ட்ரானிலிப்ரோல் 19.8% + தயாமீதாக்ஷம் 19.8 FS @ 4.0 மிலி/கிலோஎன்ற அளவில் விதையுடன் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கலாம். 3. இஞ்சி அல்லது தட்டைப்பயிறு அல்லது உளுந்து பயிர்களை வரப்பு ஓரங்களில் நடவு செய்யலாம். 4. எக்டருக்கு 12 என்ற எண்ணிக்கையில் இனக்கவர்ச்சி பொறிகளை வைக்கலாம். 5. குளோரான்டிரனிலிப்ரோல் 18.5 SC @ 0.4 மிலி/லி (அல்லது) ஃபுளூபெண்டிமைடு 20 WG (0.5 கிராம்/லி) என்ற அளவில் பயிர் செய்த 15-20 நாட்களில் தெளிக்க வேண்டும். 6. எமாமெட்டின் பென்சோயேட் 5 SG (0.4 g/l) அல்லது ஸ்பைனிடோராம் 11.7 SC (0.5 மிலி/லி) 35-40 வது நாள் மற்றும் 60 வது நாள் தெளிக்க வேண்டும். (மழை நின்ற பின் தெளிக்கவும்) |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மரவள்ளிக்கிழங்கு | 1. மரவள்ளி கிழங்கு வயல்களில் மாவுபூச்சியின் தாக்கம் தென்பட வாய்ப்புள்ளது அதை கட்டுப்படுத்த ஏக்கருக்கு பிப்ரோனில் 40 % + இமிடாகுளோபிரிட் 40 % 100 கிராம் என்ற அளவில் ஒட்டும் திரவதுடன் கலந்து தெளிக்க வேண்டும். 2. மரவள்ளி கிழங்கு வயல்களில் சிவப்பு சிலந்தி தாக்கம் தென்பட வாய்ப்புள்ளது அதை கட்டுப்படுத்த ஏக்கருக்கு ப்ரோபார்கைட் 120 மிலி என்ற அளவில் ஒட்டும் திரவதுடன் கலந்து தெளிக்க வேண்டும். (மழை நின்ற பின் தெளிக்கவும்) |
| வாழை | மிதமான மழையுடன் காற்று வீச வாய்ப்புள்ளதால் வாழை மரங்கள் முறிய வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் ஐந்து மற்றும் ஐந்து வயதிற்கு அதிகமாக இருக்கும் மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | கால்நடை கொட்டகைகளில் தரையை சுத்தமாகவும் தண்ணீர் தேக்கம் இல்லாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும் வாரம் ஒரு முறை பிளீச்சிங் பவுடர் தூவி விட வேண்டும். இது நோய் தொற்றை தடுக்க உதவும். |

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வெள்ளாடு | ஆடுகளுக்கு பி.பி.ஆர் மற்றும் துள்ளுமாரி நோய்களுக்கு தடுப்பூசி போட வேண்டும். |

**பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:**

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பொது ஆலோசனை | வரும் வாரங்களில் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதால் விவசாயிகள் மருந்து தெளிக்கும் போது ஒட்டும் திரவம் கலந்து தெளிக்கவும். |